செய்தி வெளியீடு எண்: 46 நாள்: 27.04.2018.

***தேனி மாவட்டம்,***
***அருள்மிகு விருப்பாட்சி ஆறுமுக நாயனார் திருக்கோயில்***
***மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில்***
***நூதன ஐந்துநிலை இராஜகோபுர (குடமுழுக்கு) மஹாகும்பாபிஷேகம் நடைபெற்றது:-***

*****

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் இன்று (27.04.2018) தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், கோடாங்கிபட்டி ஊராட்சிக்குட்பட்ட தீர்த்தத்தொட்டி அருள்மிகு விருப்பாட்சி ஆறுமுக நாயனார் திருக்கோயில் நூதன ஐந்துநிலை இராஜகோபுர (குடமுழுக்கு) மஹாகும்பாபிஷேகம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை உள்துறை செயலர் திரு.வெங்கடாசலம்,இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

தமிழக அரசு தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத் திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களை பாதுகாத்து பராமரிப்பதிலும், வழிபாடுகளை நடத்துவதிலும், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருவதிலும் பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் “உண்டி கொடுத்தோர், உயிர் கொடுத்தோரே” என்ற புறநானூற்று வரிகளுக்கேற்ப திருக்கோயில்கள் வாயிலாக இறை அன்பர்களுக்கு அமுது படைக்கும் அன்னதானத் திட்டத்தினை 2002-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23-ஆம் நாளன்று மைலாப்பூர் அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயிலில் தொடங்கி வைத்தார்கள். அதனைத்தொடர்ந்து, தமிழகம் முழுவதும் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் உள்ள 518 திருக்கோயில்களில் நடைபெற்று வரும் அன்னதானத் திட்டத்தினால் ஒரு நாளைக்கு சுமார் இலட்சத்திற்கும் மேற்ப்பட்ட பக்தர்கள் பயனடைந்து வருகின்றனர்.

அதன்படி, தேனி மாவட்டத்தில் பெரியகுளம் பாலசுப்பிரமணி திருக்கோயில், ஆண்டிபட்டி மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், ஜம்புலிபுத்தூர் பெருமாள் திருக்கோயில், தெப்பம்பட்டி மாவூற்று வேலப்பர் திருக்கோயில், கோடாங்கிபட்டி அறுமுக நாயனார் திருக்கோயில், போடிநாயக்கனூர் சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், வீரபாண்டி கௌமாரியம்மன் திருக்கோயில், கண்ணீஸ்வரமுடையார் திருக்கோயில், குச்சனூர் சனீஸ்வர பகவான் திருக்கோயில், சின்னமனூர் பூலாநந்தீஸ்வரர் திருக்கோயில், உத்தமபாளையம் திருக்காளத்தீஸ்வரர் திருக்கோயில், கம்பம் காசி விஸ்வநாதர் திருக்கோயில் ஆகிய கோயில்களில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் செயல்பட்டு வருகின்ற தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அமைந்துள்ள சிறு சிறு திருக்கோயில்கள் உட்பட சிறு சிறு கிராமப்புறத் திருக்கோயில்களிலும், நாள்தோறும் முறையாக பூஜை நடைபெறுவதற்கு தேவையான பூஜை சிறு சிறுத் திருக்கோயில்களுக்கு முறையான பூஜை செய்திட ஏதுவாக, பித்தளை தாம்பாளம், தூபக்கால், மணி, கார்த்திகை விளக்கு மற்றும் தொங்கு விளக்கு ஆகிய உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகிறது. மேலும்,இந்து சமய திருக்கோயில்களை ஆகம விதியின்படி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் திருப்பணி செய்து குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) தமிழஅரசு உத்தரவின் பேரில் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் வட்டம், கோடாங்கிபட்டி ஊராட்சியில் நீர்வளம், நிலவளம் மற்றும் மலைவளம் நிரம்பப்பெற்ற தீர்த்தத்தொட்டி கிராமத்தில் கருணாமூர்த்தியாக விளங்குகின்ற நீர் நிலையின் நடுவில் தனக்கென்று கம்பீரமாக அமர்ந்து வேண்டியவர்களுக்கு வேண்டிய வரங்களை வழங்கி திருவருள் அருளுகின்ற அருள்மிகு விருப்பாட்சி ஆறுமக நாயனாருக்கு ஐந்து நிலை கொண்டுள்ள அழகிய புதிய இராஜகோபுரம் ஐந்து நிலை இராஜகோபுரம் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் நன்கொடையாளர்கள் மூலம் கட்டப்பட்டு குடமுழுக்கு (கும்பாபிஷேகம்) நடைபெற்றது.

அதனைத்தொடர்ந்து, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், கம்பம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.டி.கே.ஜக்கையன் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திரு.இர.பச்சையப்பன் அவர்கள், உதவி ஆணையர் திரு.த.சிவலிங்கம் அவர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.பி.எம்.சையதுகான் அவர்கள், இராஜகோபுரம் திருப்பணி உபயதாரர்கள் வி.ப.ஜெயபிரதீப் அவர்கள், டாக்டர் பி.சந்திரமோகன் அவர்கள், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் திருமதி ராணி அவர்கள், கோவில் தக்கார் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள், செயல் அலுவலர் திருமதி மு.கிருஷ்ணவேணி அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**